1993 மார்ச் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 118, திரு. எஸ். அண்ணாமலை. மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

118—

ஆதம்பாக்கம், திருவள்ளுவர் நடுநிலைப் பள்ளியை ஆதிதிராவிடர் நலத் துறையின்கீழ் கொண்டு வருதல்.

*9961 திரு. எஸ். அண்ணாமலை : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சைதாப்பேட்டை தாலுகா, ஆதம்பாக்கம் பகுதியில் உள்ள திருவள்ளுவர் நடுநிலைப்பள்ளியை ஆதிதிராவிடர் நலத்துறையின்கீழ் கொண்டு வரும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கொண்டு வரப்படும்?

மாண்புமிகு திரு. எம் ஆனந்தன் ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) இல்லை.

(ஆ) ஏற்கனவே கல்வித் துறையால் நடத்தப்பெற்று வரும் பள்ளிகளை ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளாக மாற்றுவது தேவையற்றது என்று கருதப்படுகிறது.

திரு. எஸ். ஆண்ணாமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில், ஆதம்பாக்கம் பகுதியில் உள்ள திருவள்ளுவர் நடுநிலைப்பள்ளி தனியாரால் நடத்தப் பட்டுக் கொண்டு வருகிறது. அங்கே அந்த பள்ளியின் மீது கூறைகளும் கிடையாது. வாசக்கால் கதவு கிடையாது எதுவுமே கிடையாது. அந்த நிலையில் மழை வந்தால் அந்த பிள்ளைகள் படிப்பதற்கு முடியாத சூழ்நிலைகள் இருக்கின்றன. வெயில் அடித்தால் அவர்கள் மீது வெயில் அடித்துக் கொண்டிருக்கிற நிலையில் படித்துக் கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, அந்தப்பகுதியில் ஆதிதிராவிடர் பிள்ளைகள் தான் அந்தப் பள்ளியில் நிறையப் பேர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால் அந்தப் பள்ளியை ஆதிதிராவிடர் நலத்துறையே எடுத்து நடத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் நலத்துறையின்கீழ் இயங்கும் பள்ளிகளில் மாணவர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் கல்வித் துறையால் நடத்தப்படும் பள்ளி மாணவர்களுக்கும் அளிக்கப்படுவதால், ஏற்கனவே கல்வித்துறையில் இயங்கிவரும் பள்ளிகளை ஆதிதிராவிடர் நலத்துறை பள்ளிகளாக மாற்றத் தேவையில்லை என்று கருதப்படுகிறது. மாண்பமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற பள்ளியை நானே பார்த்தேன். அப்பள்ளி ஒரு தனியார் நடத்தக்கூடிய பள்ளி, அரசின் நிதி உதவியோடு நடத்தக்கூடிய பள்ளி. அதை கலவித் துறையே பராமரிக்கலாம். பராமரித்துக்கொண்டிருக்கிறது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைத்தால் அது பற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. எஸ். அண்ணாமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரடியாக, அழைத்துச் சென்றபோது அந்த பள்ளியைப் பார்த்தார்கள். அந்த பள்ளியின் சூழ்நிலையைப் பார்த்தார்கள். அப்படி இருந்தும் அங்கு இருக்கிற பன்றி, நாய், கழுதை அத்தனையும் அந்தப் பள்ளியிலே சென்று கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கல்வித் துறையிலே கேட்க வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) இல்லை. ஆதிதிராவிடர் நலத்துறையில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னீர்கள். அதற்கு வேறு தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. எஸ். அண்ணாமலை : அங்கே ஆதிதிராவிடர் பிள்ளைகள் அதிகமாகப் படிக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கு இல்லை. அதற்கு என்று தனிக் கேள்வி போடவேண்டும். உட்காருங்கள்.

வினா எண் 119. திரு. எம். ஆண்டி அம்பலம் இருக்கையில் இல்லை. அவர்களுக்குப் பதிலாக டாக்டர் ஜெ. பரந்தாமன் கேட்கிறார். மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் மீனளத்துறை அமைச்சர்.

அவையின் முன் அனுமதியுடன், வினாக்கள்-விடைகள் நேரம் நீடிக்கப்படுகிறது.